---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும்

பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்திகள் 42,76 மற்றும் 99 இற்கு முரணாக 2023 மார்ச் 07 திகதி முதல் 2023	2023 மார்ச் 07 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அச்சகம் சுவாதீனமான நிறுவனமொன்றாக	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க அனைத்து

	திசெம்பர் 31 திகதி வரை அச்சக வருமானம் ஆகிய ரூபா 18,504,114 தொகை, அச்சகச் செலவாகிய ரூபா 8,433,158 தொகை 2023 ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 4,497,917 தொகைக்கான கடன்பட்டோர்கள் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு சீராக்கப்படவில்லையென்பது முன்னைய ஆண்டின் கணக்காய்வின்போது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் , நடப்பாண்டில் அதற்கான சீராக்கம் செய்யப்படாமையால் திரண்ட நட்டம் ரூபா 10,070,956 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் இந்த சீராக்கம் மீளாய்வாண்டிலும் செய்யப்படாததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அச்சக வருமானம் ரூபா 19,105,758 தொகை, அச்சகச் செலவு ரூபா 15,558,566 தொகை மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 5,656,580 இற்கான இறுதி இருப்பு மற்றும் வங்கிக் கூற்றின் படி ரூபா 813,419 இற்கான மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்காமையால் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 3,547,192 தொகை மிகையாகவும், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 10,967,913 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	நடாத்திச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் அச்சகம் சுவாதீனமான நிறுவனம் ஒன்றாக கணக்குகள் தயாரிக்கப்படுகின்றது.	வருமானங்கள் செலவுகள் மற்றும் சொத்துக்கள் கணக்கீடு செய்து ஆண்டிற்கான மிகை அல்லது பற்றாக்குறை கணிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 48 இன் படி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்து காட்டுதல் மேற்கொள்ளக்கூடாது எனினும், நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோரை சித்தரித்துக் காட்டும் போது ரூபா 37,091,230 தொகைக்கான செலவு மீதி கடன்பட்டோர் பெறுமதியிலிருந்து கழித்திருந்ததுடன், அதன்படி, அந்தப் பெறுமதியினால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்	மாத இறுதி வரையும் வைப்புப் பத்திரங்களை முன்கொண்டு வந்து பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளாத வைப்புக்கள் வங்கி இணைக்கக்கூற்று தயாரிப்பதற்கு முன்னர் Course Fee Receivable-General பேரேட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு காசேட்டிற்கு பெறுவனவு என கணக்கீடு செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

	குறைவாக காட்டப்பட்டிருந்தது.	மாணவர்களை சரியாக இனங்கண்டிருக்காவிடினும், பெற வேண்டிய பாடநெறிக் கட்டண கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டிய பெறுமதியொன்றாக காணப்படுவதனால் கடன்பட்டோர் மீதி கழித்துக் காட்டப்பட்டிருந்தது.	
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 13 ஆம் பந்திக்கு முரணாக பல்கலைக்கழகத்தினால் பட்டமளிப்பு விழாவிற்காக பயன்படுத்தப்படுகின்ற பட்ட மேலங்கி மற்றும் அதற்குரிய விடயங்களை ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காண வேண்டியிருந்த போதிலும், ரூபா 19,482,345 தொகை பெறுமதியான பட்ட மேலங்கிகள் மற்றும் ஏனைய விடங்கள், சீருடைகள் மற்றும் புடவை இருப்பு என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் இருப்புக்களின் பெறுமதி அந்தப் பெறுமதியினால் மிகையாகவும், ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியினை அந்தப் பெறுமதியினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் என இனங்கண்டு எதிர் காலத்தில் பெறுமானத் தேய்வு இனங்காண்பதற்காக குறித்துக்கொண்டேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சரி செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மேலே (இ) பந்தி தொடர்பாக நியமதித்தின் பந்தி 64 பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு கழிக்கக்கூடிய பெறுமதி பயன்படுதகு ஆயுட் காலம் முழுவதும் முறையான அடிப்படை ஒன்றின் மீது பகிரப்பட வேண்டியிருந்த போதிலும், பட்ட மேலங்கிகள் மற்றும் அதற்குரிய விடயங்களின் இருப்பு என காட்டப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் போது நட்டம் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன், அந்த நட்டத்தை கணக்காய்வில் கணிக்க முடியாதிருந்தது.	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் என இனங்கண்டு எதிர் காலத்தில் பெறுமானத் தேய்வு இனங்காண்பதற்காக குறித்துக்கொண்டேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 14 இற்கு முரணாக 2022 செப்தம்பர் 19 திகதி வரை எண்டஸ்கொபி பிரிவினால் உபகரணத் தொகுப்பு பாவனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியினுள் காட்டப்பட்டிருந்த	அனைத்துச் சொத்துக்களினதும் பெறுமானத் தேய்வு பண்டப் பெறுவனவுக் குறிப்பு வழங்கப்பட்டுள்ள திகதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதனால் இந்த உபகரணங்களுக்காக பெறுமானத் தேய்வு	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிலையான சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் பெறுமானத்

	காரணத்தினால் ரூபா 24,723,156 தொகையினால் நிலையான சொத்துக்கள் குறைவாகவும் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த பெறுமதியினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக அந்த சொத்துக்ளுக்கான பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காத காரணத்தினால் ஆண்டிற்கான நட்டம் ரூபா 2,472,316 தொகையினால் குறைவாகவும் மற்றும் திரண்ட நட்டம் ரூபா 3,169,982 தொகையினால் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	கணிக்கப்படுவது 2023.06.06 திகதி முதல் ஆகும். அதன் காரணமாக சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான நட்டம் ரூபா 2,472,316 தொகை என்ற அவதானிப்புடன் இணங்குவதுடன், திரண்ட நட்டம் ரூபா 3,169,982 தொகையினால் குறைவடைந்திருந்ததென்ற அவதானிப்புடன் இணங்க முடியவில்லை.	தேய்வு கழித்தல் எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 இற்கு முரணாக பெண் நோயியல் அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்துகின்ற அறுவை சிகிச்சை தொகுதிகளின் கிரயமாகிய ரூபா 7,845,381 தொகை வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் காட்டப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் குறைவாக மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த எண்ணிக்கையினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. மேலும், இந்த விடயங்களுக்காக 2019 ஜூன் முதல 2024 ஆண்டு வரை பெறுமானத் தேய்வு கழிக்கப்படாமையால் 2024 ஆண்டின் நட்டம் ரூபா 784,538 தொகையினால் குறைவாகவும், திரண்ட நட்டம் ரூபா 3,557,289 தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் இந்த சிக்கல்களை தீர்த்து குறிப்பிட்ட பெறுமதியை சொத்து என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க குறித்துக்கொண்டேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிலையான சொத்துக்களை சரியாக இனங்கண்டு மற்றும் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 38 இற்கு முரணாக இருப்பினுள் அடங்கியுள்ள ரூபா 22,858,871 தொகை பெறுமதியான டோனர் மற்றும் காட்ரிஜ் இல் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டு ஆனால் வழங்கப்பட்டிருக்காமல் காணப்பட்ட ரூபா 3,600,465 இற்கான இருப்பொன்று காணப்பட்டதுடன், அதற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான நட்டம் அந்த பெறுமதியினால் குறைவாக	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். எதிர் காலத்தில் குறிப்பிட்ட இருப்புக்களை வெவ்வேறாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காலவதியாகிய இருப்புக்களுக்காக ஒதுக்கம் மேற்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

காட்டப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழக வைத்தியசாலையின் ரூபா 2,936,288 தொகை பெறுமதியான 2,725 Rapid Antigen மற்றும் PCR தொகுதிகள் மற்றும் ரூபா 16,441,056 தொகை பெறுமதியான 363,012 மருந்துகள் மற்றும் நோய் தடுப்புப் பால்கள் காலவதியாகியிருந்ததுடன், அதற்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ஆண்டிற்கான நட்டம் இந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழக கேட்போர் கூடத்திற்காக நிர்மாண செயற்திட்டத்தின் கீழ் ரூபா 84,848,400 இற்கான பெறுமதியுடைய 1275 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த கொள்வனவிற்காக 2023 ஜுன் 07 திகதி ரூபா 29,272,698 தொகை (VAT உடன்) என முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக இடைக்காலக் கொடுப்பனவு என 02 சந்தர்ப்பங்களில் ரூபா 60,794,261 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, இந்தக் கதிரைகள் 2023 நவம்பர் 14 திகதி பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்தது. எனினும், இந்தக் கொள்வனவு தொடர்பாக செலுத்தப்பட்டிந்த முற்பணத் தொகை நிதிக்கூற்றுக்களில் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என (Mobilization Advance) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 29,272,698 தொகை மிகையாகவும், நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலை அந்தப் பெறுமதியினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என காட்டப்பட்டிருந்த ரூபா 29,272,698 இற்கான பெறுமதி நடைமுறை வேலைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு சரி செய்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டதுடன், இந்த மொத்தப் பெறுமதிக்குள்ள கதிரைகள் கேட்போர்கூட கட்டிடத்தில் பொறுத்திய பின்னர் நிலையான சொத்துக்கள் என இனங்காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நடைமுறை வேலையை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	அடுத்த ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய லொன்ட்ரி வருமானம் ரூபா	பிழைகளை சரி செய்வதற்கும் தீர்க்கப்படாத மீதிகளை	வருமானங்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில்

	5,349,465 தொகை மிகையாகவும், மீளாய்வாண்டின் லொன்ட்ரி வருமானம் மற்றும் பெற வேண்டிய லொன்ட்ரி வருமானம் ரூபா 803,925 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	தீர்ப்பதற்கும் குறித்துக்கொண்டேன்.	உட்படுத்தப்பட வேண்டும்.
(இ)	இருப்பு முறைமையில் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக முகாமைத்துவத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு குறைந்த அளவு ஒரு வருடத்திற்கு ஒருமுறை ஏனும் இருப்புக்களை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்காய்வாளரினால் வேண்டப்பட்ட இருப்பு கணக்கீட்டு பத்திரங்கள் வழங்கப்படாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 224,362,977 தொகைக்கான இருப்பு தொடர்பாக நம்பகத் தன்மை மற்றும் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வில் முடியவில்லை.	குறிப்பிட்ட அறிக்கைகளில் இருப்புத் தகவல்கள் எந்த மூலங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென மற்றும் அவற்றின் நம்பகத் தன்மை உறுதிப்படுத்தப்படுவது எவ்வாறு என பொருளாளர் அலுவலத்தில் இருந்து தகவல் வினவுதல் பொருத்தம் என நினைக்கின்றேன்..	இருப்புக்களின் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இருப்பு மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	2022 ஆண்டின் செலவு மீதியொன்றென காட்டப்பட்டிருந்த கொள்வனவு முற்பணம் ரூபா 709,820 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதியளவிலும் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், தென் வளாகத்தில் மீளாய்வாண்டு இறுதியளவில் தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக வழங்கியிருந்த விரிவான அட்டவணையின் படி ரூபா 677,563 தொகையாக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 1,763,601 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், நடைமுறை சொத்துக்கள் ரூபா 1,086,038 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.	பேரேடு மற்றும் அட்டவணைகள் பரிசோதனை செய்து குறிப்பிட்ட சரியாக்கல்கள் மேற்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன்.	சரியான முற்பணத்தின் பெறுமதி கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

விடயம்	பெறுமதி ரூபா	கிடைக்கப் பெறாத சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
செலவுகள்	5,000,000	கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள்	இது தொடர்பாக உள்ளக விசாரணைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காய்விற்கு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
ஏனைய பெற வேண்டிய மீதிகளில் அடங்கியுள்ள நலனோம்பு நிதியத்திற்கு 2022 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 331,000 தொகை 2024 ஆண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. மேலும், ரூபா 12,070,570 இற்கான பெற வேண்டிய வாடகை வருமானத்தில் ரூபா 6,000,000 தொகைக்கான வாடகை வருமானம் KDU Hotel நிறுவனத்திலிருந்து பெற வேண்டியிருந்தது. அதேபோல், மின்சாரம் மற்றும் நீர் வழங்குவதற்காக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிதி நிறுவனத்திடம், பல்கலைக்கழக வைத்தியசாலையில் இருந்து மற்றும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,314,450 இற்கான தொகையொன்று அறவீடு செய்யாமல் 01 வருடத்திற்கும் 04 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்ததுடன், பல்கலைக்கழக மாணவர்கள், நிரந்தர ஊழியர்கள் மற்றும் கெடட் அதிகாரிகளின் பிணைமுறி மீறல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 119,467,611 தொகை அறவீடு செய்வதற்கு முடியாமல் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது.	மீண்டும் அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைக்காக கணிசமான காலம் எடுக்கின்றது.	பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் பிரிவு 12.2.5	கடமை அணவல் செய்யும் பல்கலைக்கழகத்தின் 644 ஆவது முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் பொருளாளர், மிலோதா நிறுவனத்தின் கணக்காளர் பதவியில் கடமை அணவல் செய்வதற்காக 2022 ஜூலை 01 திகதி நியமனம் செய்யப்பட்டு கடமை அணவல் செய்வதற்காக கணக்காளரின் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீதம் கொடுப்பனவு செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2022 செப்தம்பர் 13 திகதி முதல் மிலோதா நிறுவனத்திற்கு உதவி பொருளாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் முதல் 2023 ஒக்தோபர் வரை கடமை அணவல் செய்யும் கொடுப்பனவு என ரூபா 452,238 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவிலும் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2022.09.13 திகதி இராணுவத்திலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒரு வாரத்திற்கு 03 நாட்கள் மாத்திரம் மெட்ரோ பொலிடன் நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கும் அந்த உத்தியோகத்தரின் அனுபவம் குறைவாக காணப்பட்டமையால் பல்கலைக்கழகத்தின் தகைமைகள் மற்றும் அனுபவமுடைய பொருளாளர் மெட்ரோ பொலிடன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் கணக்காளர் பதிவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்தது.	தாபனக் கோவைக்கு இணங்க வேண்டும்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i) நிதிப் பிரமாணங்கள் 200, 128, 103 முதல் 108 வரை	மேற்கூறிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அரச நிதி செலவிடல் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீடு மற்றும் தவறு அல்லது மோசடி தொடர்பாக செயற்படுதல் உட்பட அலுவல்களின் போது போதியளவு ஏற்பாடுகளை பிரயோகித்தல் பிரதான கணக்கீட்டு	பிரதி துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) தலைமைத்துவத்தில் கீழுள்ள குழுவொன்றின் மூலம் நிர்வகிப்பதற்காகவும், அச்சகம் சுவாதீன நிறுவம் ஒன்றென நடாத்திச் செல்வதற்கும் ரூபா 5 மில்லியன் கடன்	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அச்சகம் தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மேலும், 1988 நவம்பர் 11 திகதி வெளியிடப்பட்ட சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பயிற்சி நிலையப் பிரமாணங்கள் 8 இன் படி முகாமைத்துவச் சபையினால் நியமனம் செய்யப்பட்ட கணக்காளர் அரச நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியுள்ளது என காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது 2023 மார்ச் 08 திகதி அச்சகம் சுயாதீன நிறுவனம் ஒன்றென செயற்படுவதற்காக முகாமைத்துவ சபையினால் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் காரணமாக மற்றும் உறுதிச் சீட்டிலக்கம் 954-G மூலம் 2023 மார்ச் 13 திகதி ரூபா 5,000,000 தொகை அச்சகத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக செயற்படுவதற்கு உடந்தையாக இருத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	தொகையொன்று வழங்குவதற்கும் 2023 மார்ச் 07 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	
(ii)	நிதிப் பிரமாணம் 384 முதல் 386 வரை	காசோலைகள் குறுக்குக் கோடிடப்பட்டு பேணிச் செல்ல வேண்டியதுடன், திறந்த காசோலைகள் வழங்கப்படக் கூடாது எனினும், அச்சகத்தினால் 31,951 முதல் 31,975 வரையான இலக்கம் கொண்ட காசோலைப் புத்தகத்தின் 24 காசோலைகள் காசுக் காசோலைகள் என வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 24 காசோலைகளின்	அச்சகத்தின் கண்காணிப்பு அலுவல்கள் மேற்கொண்டிருந்த உத்தியோகத்தரினால் அவ்வவ் அச்சக அலுவல்களுக்காக எழுத்துமூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்த மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக மாத்திரம் கொஆவி அச்சகத்திற்கு சேர்க்கப்பட்ட செயற்பாட்டு முகாமையாளருக்கு அந்த	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காசோலைகள் வழங்கும் போது செயற்பட வேண்டும்.

	பெறுமதி ரூபா 5,516,486 தொகையாக காணப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட காசோலைகளுக்கு மேலதிகமாக வங்கிக் கூற்றின் படி 2023 ஜூலை மாதம் முதல் ஒக்தோபர் வரை ரூபா 3,760,843 தொகை பெறுமதியான 35 காசோலைகளும் காசுக் காசோலைகள் என வழங்கப்பட்டிருந்தது.	பணம் உரிய முறையில் வழங்கப்பட்டிருந்தது.	
(iii) நிதிப் பிரமாணம் 139(6)	காசோலை ஒன்றின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது பெறுவோரின் பெயர் உறுதிச் சீட்டில் காணப்படும் விபரங்களுடன் ஒப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், அச்சகத்தினால் கணக்காய்விற்கு வழங்கியிருந்த இன்வொயிஸ்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது அந்த இன்வொயிஸில் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் பெயருக்கு காசோலை வழங்கியிருக்காததுடன், காசோலை எழுதும் போது காசோலைக்கு கையொப்பமிடும் "Officer In Charge" உத்தியோகத்தரினால் இந்த காசுக் காசோலைகளில் ரூபா 1,538,945 தொகைக்கான 08 காசோலைகள் தனது பெயரில் எழுதி காசுக் காசோலைகள் வழங்கப்பட்டிருந்தது.	அச்சகத்தின் கண்காணிப்பு அலுவல்கள் மேற்கொண்டிருந்த உத்தியோகத்தரினால் அவ்வவ் அச்சக அலுவல்களுக்காக எழுத்துமூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்த மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக மாத்திரம் கொஆவி அச்சகத்திற்கு சேர்க்கப்பட்ட செயற்பாட்டு முகாமையாளருக்கு அந்த பணம் உரிய முறையில் வழங்கப்பட்டது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காசோலைகள் வழங்கும் போது செயற்பட வேண்டும்.
(iv) நிதிப் பிரமாணம் 257 மற்றும் நிதிப் பிரமாணம் 225	நிதிப் பிரமாணம் 257 பிரகாரம் சான்றுபடுத்திய உறுதிச்சீட்டுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், சான்றுபடுத்தியிருக்காத உறுதிச்சீட்டொன்றுக்கு	அனைத்து அலுவல்களுக்கான உறுதிச்சீட்டுக்கள் அச்ச கட்டளையிடும் உத்தியோகத்தரினால் பரிந்துரையுடன் மற்றும் துணை வேந்தரின்	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சான்றுபடுத்திய உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	பணம் செலுத்துதல் அதிகாரமற்ற கொடுப்பனவு என கணிக்கப்படுவதுடன், அவ்வாறு செலுத்தப்படுகின்ற பணம் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், உரிய படிவங்களில் சரியாகவும், முழுமையாகவும் நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களும் கொடுப்பனவுகளுக்காக அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், அச்சகத்தின் கொடுப்பனவிற்காக உறுதிச் சீட்டுக்கள் தயாரித்து சான்றுபடுத்திய உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்திருக்கவில்லை.	அங்கீகாரத்தின் பின்னர் அந்த மூலப் பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ற காசோலையொன்று காசாக்கப்பட்டு செயற்பாட்டு முகாமையாளருக்கு பணம் வழங்கப்பட்டு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது.	
(v) நிதிப் பிரமாணம் 272	கொடுப்பனவு செய்த அனைத்து உறுதிச்சீட்டுக்களும் அவற்றின் தொடர் இலக்கத்தின் படி தயாரிக்கப்பட்டு பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டியதுடன், கணக்காய்வுக்குத் தேவையான விடயங்களை பூர்த்தி செய்து தயார் நிலையில் வைத்திருப்பதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அறிக்கைத் திகதியளவிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பிபதற்கு அச்சகத்திற்கு முடியாமல் இருந்தது.	அனைத்து அச்சு அலுவல்களுக்கான உறுதிச்சீட்டுக்கள் அச்சு கட்டளையிடும் உத்தியோகத்தரினால் பரிந்துரையுடன் மற்றும் துணை வேந்தரின் அங்கீகாரத்தின் பின்னர் அந்த மூலப் பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ற காசோலையொன்று காசாக்கப்பட்டு செயற்பாட்டு முகாமையாளருக்கு பணம் வழங்கப்பட்டு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கணக்காய்விற்கு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
(vi) நிதிப் பிரமாணம் 262(2)	கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களும் அவற்றை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களிலும்,	அனைத்து அச்சு அலுவல்களுக்கான உறுதிச்சீட்டுக்கள் அச்சு கட்டளையிடும் உத்தியோகத்தரினால் பரிந்துரையுடன் மற்றும் துணை வேந்தரின்	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும்

	‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ என்று முத்திரை பதிக்கப்பட்டு திகதியுடன் செலுத்தப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம் அல்லது சுறுக்கக் கையொப்பம் இடப்பட வேண்டியிருந்த போதிலும், அச்சகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகைக்கான பணம் செலுத்தி மேற்கொள்ளப்பட்ட கொள்வனவிற்காக எந்த இன்வொயிஸிலும் அவ்வாறான முத்திரை அச்சகத்தினால் பதிந்திருக்கவில்லை.	அங்கீகாரத்தின் பின்னர் அந்த மூலப் பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ற காசோலையொன்று காசாக்கப்பட்டு செயற்பாட்டு முகாமையாளருக்கு பணம் வழங்கப்பட்டு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ என முத்திரை பதிக்கப்பட வேண்டும்.
(vii) நிதிப் பிரமாணம் 386(3)	எழுத்தப்படுகின்ற அனைத்து காசோலைகளின் அடியிதழ்களில் உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் அச்சகத்தினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.	அனைத்து அலுவல்களுக்கான உறுதிச்சீட்டுக்கள் அச்ச கட்டளையிடும் உத்தியோகத்தரினால் பரிந்துரையுடன் மற்றும் துணை வேந்தரின் அங்கீகாரத்தின் பின்னர் அந்த மூலப் பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ற காசோலையொன்று காசாக்கப்பட்டு செயற்பாட்டு முகாமையாளருக்கு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அடியிதழ்களில் பதவு செய்யப்பட வேண்டும்.
(viii) நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138 மற்றும் 140	செலவுகளுக்காக நிதிப் பிரமாணம் 136 இன் பிரகாரம் அதிகாரம் அளித்தல், நிதிப் பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகரித்தல், நிதிப் பிரமாணம் 138 இன் பிரகாரம் உறுதிச்சீட்டுக்களுக்கு பணம் செலுத்துதல் மற்றும் நிதிப் பிரமாணம் 140 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் ஆகிய நிதிப்	அனைத்து அலுவல்களுக்கான உறுதிச்சீட்டுக்கள் அச்ச கட்டளையிடும் உத்தியோகத்தரினால் பரிந்துரையுடன் மற்றும் துணை வேந்தரின் அங்கீகாரத்தின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

		பிரமாணங்கள் அச்சகத்தினால் கடைபிடிக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	2024 பெப்ரவரி 28 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரிவு 11.4	உத்தியோகபூர்வ வாகனமொன்று பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனும் தொழிலொன்றில் அரசுக்கு சொந்தமான பல தொழில் முயற்சிகளில் சேவையாற்றிய போதிலும், அந்த உத்தியோகத்தருக்கு ஒரு வாகனம் மாத்திரம் வழங்க வேண்டும். அதன்படி, கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2024 ஆண்டின் போது இலங்கை இராணுவத்தினால் எரிபொருள் மற்றும் சாரதியுடன் 03 வாகனங்கள் முறையே பிரதான கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பணிப்பாளர் வைத்திய உத்தியோகத்தருக்காக வழங்கியிருந்த போதிலும், பல்கலைக்கழக வைத்தியசாலையினாலும் ஒதுக்கப்பட்ட 03 வாகனங்கள் மேற்கூறிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால், வாடகைச் செலவு என ரூபா 2,400,000 தொகை என மற்றும் எரிபொருள் செலவு என ரூபா 1,316,790 தொகை மேற்கூறிய சுற்றறிக்கை முரணாக செலவிடப்பட்டிருந்தது.	தற்போது வைத்தியசாலை தேக்கத்தில் காணப்படுகின்ற எந்த வாகனமும் உத்தியோகத்தர்களுக்கு தனது தனிப்பட்ட பயன்பாட்டுக்காக ஒதுக்கப்படாததுடன், அனைத்து வாகனங்களும் வைத்தியசாலையின் பொதுத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
(ஈ)	2022 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2020/01 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5)	குறிப்பிட்ட கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் துணைக் கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 13 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா	மருத்துவ பீடத்தின், சுகாதார அறிவியல் பீடத்தின் பரீட்சைகளின் போது பரீட்சை அலுவல்களுக்காக வெளி வைத்தியர்கள் மற்றும் ஏனைய நிபுணர்கள்	நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்தினுள் துணைக் கட்டுநிதிகள் தீர்ப்பதற்கும் ரூபா

544,854 தொகைக்கான முற்பணங்கள் 12 நாட்களுக்கும் 718 நாட்களுக்கு இடைப்பட்ட கால வீச்சிலும், 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,439,336 தொகைக்கான கொள்வனவு முற்பணங்கள் 11 நாட்கள் முதல் 169 நாட்களுக்கு இடைப்பட்ட காலவீச்சொன்றினுள் தீர்க்கபட்டிருந்ததுடன், 2021 ஆண்டு வழங்கியிருந்த ரூபா 62,029 தொகைக்கான முற்பணம் 1,117 நாட்கள் கடந்திருந்த போதிலும், தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், மேற்கூறிய சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 371(2)(அ) பிரிவின் படி ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக பதவியணி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 தொகை உச்ச அளவு வரை நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்க முடியுமாக இருந்ததுடன், 2024 ஜுன் 27 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் 03 விஷேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் நிமித்த முற்பணத் தொகையை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்கூறிய விஷேட 03 சந்தர்ப்பங்களில் அடங்காத கருமம் ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது 54 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 தொகையை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 21,384,590 இற்கான முற்பணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

பரீட்சை நுண் பரிசோதனைக்காக வருகின்றார்கள். அவ்வாறான சிக்கலான கருமம் ஒன்றாக முன் திட்டமிடப்பட்டிருந்த மற்றும் அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி ரூபா 100,000 தொகையை விட மிகையான பெறுமதியுடைய துணைக் கட்டுநிதிகள் வழங்குவதற்கு நேரிடுகின்றது. அவ்வாறான துணைக் கட்டுநிதிகள் பரீட்சை அலுவல்கள் முடிந்தவுடன், குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் தீர்க்கப்படுவதுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களில் மீதி ஏதும் காணப்படின் பல்கலைக்கழக கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது.

100,000 தொகை வரையறையினை மிகைக்காமல் இருப்பதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,350,567,251 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,682,837,905 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,667,729,346 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு அரச மீண்டுவரும் பங்களிப்பு ரூபா 2,046,133,569 தொகையினால் குறைவடைதல், வட்டி வருமானம் ரூபா 626,588,234 தொகையினால் குறைவடைதல் மற்றும் வைத்தியசாலைச் செலவு ரூபா 425,579,269 இனால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 18.44 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,871,823,682 தொகையினால் குறைவடைந்திருந்ததுடன், அதற்காக வெளிநாட்டு பிரயோக பணத்தின் மூலம் பேணிச் செல்லப்பட்டிருந்த நிலையான வைப்பு முதலீடு திருப்பி எடுத்த காரணத்தினால் வட்டி வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்தச் செலவும் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப 8.65 சதவீத்தினால், அதாவது ரூபா 740,446,454 தொகையினால் அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பதவியணிச் சம்பளம் மற்றும் படிகள் பராமரிப்புச் செலவுகள் மற்றும் வைத்தியசாலைச் செலவுகள் அதிகரித்தல் இதற்குக் காரணமாக இருந்ததுடன், அந்த அதிகரிப்புக்கள் முறையே 21 சதவீதம், 27 சதவீதம் மற்றும் 35 சதவீதமாக காணப்பட்டது. பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் இடையே சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் 14 சதவீதத்தினால் அதாவது ரூபா 259,532,469 தொகையினால் ஆய்வுக் கொடுப்பனவுகள் 67 சதவீதத்தினால் அதாவது ரூபா 42,095,761 தொகையினாலும், பராமரிப்புச் செலவினுள் கணினிகள், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பராமரிப்புச் செலவு 43 சதவீதத்தினாலும், அதாவது, ரூபா 80,430,034 தொகையினாலும் மற்றும் வைத்தியசாலையின் பொதுமக்கள் பிரிவின் செலவு 45 சதவீதத்தினால், அதாவது 345,422,727 தொகையினாலும் அதிகரித்திருந்தது.

2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டில் (-11.01) சதவீதமாக காணப்பட்ட உரிமை மூலதனத்தின் மீது நலன்களின் விகிதாரசாரம் மீளாய்வாண்டின் போது (-19.41) வரை வீச்சியடைந்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டு 0.91:1 தொகைக்கான நடைமுறை விகிதாசாரம் மீளாய்வாண்டின் போது 0.48:1 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது உரிமை மூலதனத்தின் மீது கடன் விகிதாசாரம் 0.73:1 தொகை காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அது 0.85:1 தொகை வரை அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைததுவ திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழக வைத்தியசாலையில் 2024 ஆண்டு இறுதியில் ரூபா 16,441,056 தொகை பெறுமதியான 363,012 மருந்துகள் மற்றும் நோய் தடுப்புப்பால் காலவதியாகியிருந்ததுடன், அந்த மருந்துகள் காலவதியாகிய பின்னர் களஞ்சியம் மற்றும் வைத்தியசாலையின் பல பிரிவுகளில் 01 வருடத்திற்கும் 06 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் காணப்பட்டது.	வைத்தியசாலையின் ஆரம்பத்தில் எத்தனை நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வருவார்கள் என தீர்மானிக்க முடியாமை மற்றும் மருந்து இருப்புக்கான மென்பொருள் வசதிகள் காணப்படாமை, மருந்துகள் மற்றும் நோய்த் தடுப்புப்பால் பரிமாற்ற முடியாது உள்ளது.	மருந்து இருப்பு முகாமைத்துவம் சரியாக மேற்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(ஆ)	கெஸ்பேவா பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 21.5815 ஹெக்டயர் காணிப் பகுதியொன்று பல்கலைக் கழகத்தின் போதனா வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வைத்தியசாலை கட்டிடங்களின் பெறுமதி ரூபா 45,385,484,229 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,216,884,293 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு 08 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட காணியை உரிததாக்குதல் பூர்த்தியடைந்திருக்கவில்லை.	இந்தக் காணியின் உரிமை தற்போது வரையறுக்கப்பட்ட பிரொவிடன் பிரபேர்டி லங்கா கம்பனிக்கு சொந்தமானதுடன், உரித்தாக்கல் அலுவல்களுக்காக காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு பாதுகாப்பு அமைச்சுக்கு மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகத்திற்கும் உரிய நடவடிக்கைகளுக்காக கடிதங்கள் மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலைக்காக காணியை உரித்தாக்குவதற்கு அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதென மேலும் கருணையுடன் அறிவிக்கின்றேன்.	குறிப்பிட்ட அரச நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து வைத்தியசாலை அமைந்துள்ள காணியை விரைவாக உரித்தாக்கக்கூடிய அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
(இ)	2021 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் அமப/21/0584/303/052 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மிலோதா நிதிக் கல்வி நிறுவனத்தை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்கும்	பதவியணி அங்கீகாரத்திற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	தகைமையுடைய பதவியணியொன்று விரைவாக அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க

	போது அந்த நிறுவனத்திற்காக தகைமையுடைய பதவியணியொன்றை தீர்மானிப்பதற்கும் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் பதவியணியினை அங்கீகரித்ததுக்கொள்ளதவற்காக பல்கலைக்கழகத்திற்கு முடியாமல் இருந்தது.		வேண்டும்.
(ஈ)	1988 இன் 27 ஆம் இலக்கம் மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவனச் சட்டத்தின் பிரகாரம் 2011 ஆண்டு முதல் கெடட் அதிகாரிகள் அல்லது அரச அதிகாரிகள் அல்லாத உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மாணவர்கள் பணம் செலுத்தும் அடிப்படையில் பட்டங்கள் வழங்குவதற்கு உள்வாங்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 21 திகதி நடைபெற்ற அரச தொழில் முயற்சிகள் குழுவில் மாணவர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் நிர்வாகசபைத் தீர்மானங்களின் செல்லுபடியாகும் தன்மை ஆகிய விடயங்கள் அடங்கக்கூடியவாறு பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமாக சட்டத்தை திருத்திக்கொள்ளும் படி அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் சட்டத்தின் திருத்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	சட்ட வரைவுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் சட்டபூர்வத் தன்மை தொடர்பாக சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி பாதுகாப்பு அமைச்சிடம் 2024.06.27 திகதி வேண்டப்பட்டது. சட்ட வரைவுடன் முன் எடுத்துச் செல்வதற்காக அமைச்சரவையின் மூலம் புதிய அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ளும் படி வேண்டி சட்டவரைஞரினால் 2024.11.28 திகதி கடிதமொன்று இந்த பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிற்கு 2024.12.11 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது.	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் படி விரைவாக சட்டத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	2022 மே 09 திகதிய பெறுகைகள் வழங்கும் கடிதத்தின் மூலம் SAGE 300 ERP Solution கணினி மென்பொருள் 2022 ஜூன் 25 திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் சம்பளங்கள் தயாரிக்கும் மொடியுள்	சம்பளம் தயாரித்தல் மொடியுள் (Payroll Module) உரிய முறையில் நிறுவப்பட்டு கடந்த பல மாதங்களாக பழைய சம்பளம் தயாரிக்கும் மொடியுள் மற்றும் புதிய மொடியுள் சமாந்தரமாக செய்படுத்தப்பட்டு வருவதுடன், அவ்வாறாயினும், 2025 ஏப்ரல் மாதத்தில் அரசினால்	பெறுகையின் போது இனங்காணப்பட்ட அனைத்து கருமங்களுக்குமாக மென்பொருள்கள் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

நிறுவப்பட்டிருந்த போதிலும், அது செயற்படு மட்டத்தில் காணப்படவில்லை.	மேற்கொள்ளப்படுகின்ற சம்பளத் திருத்தத்தின் காரணமாக மீண்டுமொறுமுறை சம்பள மொடியுளில் சில திருத்தங்கள் மேற்கொள்ள நேரிட்டிருந்தது.	

3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 ஆண்டின் போது பல்கலைக்கழக வைத்தியசாலையில் ஆய்வுகூட பரிசோதனைப் பொருட்கள் மற்றும் அறிக்கைகள் எடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் ரூபா 96,846,900 தொகை (530,000 அ.டொ) செலவிடப்பட்டு 56 பிரிவுகளை (Stations) தொடர்புபடுத்தி வாயுக் குழாய் முறைமையொன்று நிறுவப்பட்டிருந்ததுடன், அவற்றில் 52 பிரிவுகளுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போது பிரயாண தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியளவில் 20 பிரிவுகள் செயற்படாமல் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது இந்த முறைமைகளுடாக 43,307 பிரயாணத் தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த 70,217 பிரயாணத் தடவைகளுக்கு ஒப்பாக 38 சதவீதம் குறைவடைதல் ஒன்று காணப்பட்டது.	இந்த முறைமைக்காக அணுகியிருந்த சேவை உடன்படிக்கை 2023 ஏப்ரல் 21 திகதி முடிவடைந்திருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் 56 (Stations) பிரிவுகளில் இருந்து 04 (Stations) பிரிவுகள் செயற்படாத நிலைமை காணப்பட்டதுடன், சேவை உடன்படிக்கைக்காக 17,490 அ.டொ. செலவிடப்பட்டிருந்தது. சேவை உடன்படிக்கைக்காக கூடிய கிரயமொன்று மேற்கொள்வதற்கு வைத்தியசாலையிடம் பணம் காணப்படாமையால் 2024 நவம்பர் மாதம் 01 திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் அந்த முறைமையின் ஆயுட் காலம் முடியும் வரை பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டது.	பாரிய செலவொன்று மேற்கொண்டு நிறுவப்பட்டிருந்த வாயுக் குழாய் முறைமை உச்சமட்ட கொள்திறனுடன் வைத்தியசாலை அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	வைத்திசாலை வாட்டு இலக்கம் 5A, 7A மற்றும் 7B மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 02, 03 மற்றும் 04 2024 மே மாதம் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன், அவற்றில் காணப்படுகின்ற ரூபா 210,190,808 தொகை பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.	வாட்டு இலக்கம் 7A மற்றும் 7B ஆகிய பிரிவுகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் செயற்படு நிலைமையில் காணப்படுகின்றது. போதியளவு மனித வளம் காணப்படாமையால் வைத்திய உபகரணங்கள் மற்றும் பண்டங்கள் செயற்படுத்தப்படாத மட்டத்தில் காணப்பட்டது. அரசினால் ஆட்சேர்ப்பு வரையறைக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மனிதவளம் கிடைத்தவுடனே குறிப்பிட்ட மருத்துவ உபகரணங்கள் பயன்படுத்தப்படும்.	வைத்தியசாலையின் அனைத்து வாட்டுக்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் முழுமையான கொள்திறனை பயன்படுத்துவற்கு மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

(இ)	2025 மார்ச் 31 திகதி அளவில் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்த ரூபா 13,992,414 தொகை பெறுமதியான 14 மருத்துவ உபகரண விடயங்களுக்குரிய 136 அலகுகள் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டதுடன், அந்த விடயங்கள் 2018, 2019 மற்றும் 2021 ஆண்டுகளின் போது களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. இதய தொராசி அலகுக்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 186,506,145 தொகை பெறுமதியான 02 மருத்துவ உபகரண விடயங்களின் 05 அலகுகள் விளைவற்று களஞ்சியப்படுத்தியிருந்ததுடன், அதில் ரூபா 58,198,545 தொகை பெறுமதியான மருத்துவ உபகரண விடயங்கள் தொடர்பான 03 அலகுகளின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தது. 2017 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த 14 வைத்தியசாலை கட்டில்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.	இந்த மருத்துவ உபகரணங்கள் Covid – 19 காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வாட்டுகளுக்காக வழங்கப்பட்டதுடன், நோய் குறைவடைந்த போது வாட்டுக்கள் மூடப்பட்டமையால் பாதுகாப்பாக வைப்பதற்கு மீண்டும் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. திருத்த வேலை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற செயலமர்வுகளுக்காக இந்த உபகரணங்கள் வழங்கப்படுகின்றது. இந்த உபகரணங்களில் ஒரு பகுதி துருப்பிடிக்காத உருக்கினால் ஆக்கப்பட்டிருப்பதனால் தொடர்ந்து வரும் தேவைப்பாடுகளுக்காக வழங்கல் மேற்கொள்ளப்படும்.	விளைவற்று காணப்படும் மருத்துவ உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.
(ஈ)	தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்காணாமல் 2021 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 2,786,850 தொகை பெறுமதியான 675 கம்பிகள் தென் வளாகக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன், வினியோகிக்கப்படாமால் காணப்படுகின்ற இந்த இருப்பினை பல்கலைக்கழகத்தினால் பயன்படுக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்பின் படி தேவையான குழுவொன்று நியமனம் செய்து, அந்தக் குழுவின் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்திட்ட மற்றும் மூலதன வேலைகளின் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
1,300,334 அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த முகாமைத்துவ தகவல் முறைமை 2023 பெப்ரவரி 24 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 03	செயற்திட்டம் 2025 ஜனவரி 08 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். தேவைப்பட்டின் படி உள்ளமைவு மற்றும் தனிப்பயனாக்கம் பூர்த்தி செய்திருந்ததுடன்,	திட்டமிட்டுள்ளவாறு முறைமையை நிறுவி எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சந்தர்ப்பங்களில் கால நீடிப்பின் பின்னர் இந்த செயற்திட்டம் 2025 ஜனவரி 22 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஏப்ரல் 30 திகதி அளவிலும் இந்த செயற்திட்டத்தின் 90 சதவீத எண்ணிக்கை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அச்சந்தர்ப்பம் அளவில் 1,075,164.34 அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டிருந்தது.	முறைமையில் எதிர்பார்த்தவாறு நேரடியாக செயற்படுத்துவதற்கு முடியாதுள்ளது. வன்பொருள் நிறுவுதல் 88.5% உம், மென்பொருள் நிறுவுதல 100 % உம், மென்பொருள் தனிப்பயனாக்கம் 85 % உம் மற்றும் ஒட்டுமொத்த முன்னேற்றம் 90% உம் என கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.5.1(ஈ) படி ஏதேனும் அரச முகவராண்மையொன்றினால் சுயமாக செயற்படும் நேரடி ஒப்பந்த வேலை முறைக்காக தகைமை பெறாததுடன், அதற்காக 3.5.1(இ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அச்சகத்தினால் ரூபா 4,676,475 இற்கான கொள்வனவு மேற்கொள்ளும் போது நேர் ஒப்பந்த வேலை முறைமையின் கீழ் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சந்தை உருவாக்கும் விலை முறையை பயன்படுத்தி வழங்குனர்களை பதிவுசெய்தல் அல்லது தொலைபேசி பெயர் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள வியாபாரிகளுடன் கூறுவிலைகள் அழைத்தல் அல்லது பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட தொழில்நுட்ப விவரக் குறிப்பு தயாரித்தலும் அச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் டென்டர் நடைமுறையின் படி நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் கூறுவிலை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ரூபா 17,493,620 இற்கான தொகைக்கு 50 மீற்றர் எயார் பிளோ, 440 அலகுகள் ஹை சக்ஷன் கொண்ட்ரோலர் மற்றும் லோ சக்ஷன் கொண்ட்ரோலர் 07 அலகுகள் கொள்வனவு செய்தவற்காக பல்கலைக்கழகத்தினால் தனியார்	இந்த மருத்துவ விடய இருப்புக்கள் தொடர்பாக பெறுகைக் கோவை பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலை ஆரம்பிக்க முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மருத்துவ	இந்த விளைவற்ற மற்றும் தரப் பரிசோதனை தோல்வியடைந்த மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்று 2018 மே 18 திகதி அணுகியிருந்ததுடன், 2019 ஆண்டின் போது நாணயக் கடிதம் திறக்கப்பட்டு ரூபா 9,160,362 தொகை குறிப்பிட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த உபகரணங்கள் உரிய முறையில் வைத்தியசாலையின் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததை உறுதிப்படுத்துவதற்காக பண்டப் பெறுவனவுப் பத்திரம் அல்லது அதன் பிரதிகள் குறிப்பிட்ட களஞ்சியத்திற்கோ அல்லது KDU/PRO/CAP/1251/2017 இலக்கம் கொண்ட கோப்பிலும் உட்படுத்தியிருக்கவில்லை. 2025 மே 02 திகதி பௌதீக பரிசோதனையின் அவதானிப்பின் படி இந்த உபகரணங்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் வைத்தியசாலை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. 2024 ஆகஸ்ட் 14 திகதிய விவிரோ/கொஆவி/வைத்தியா/உஅ/04/2024(13) இலக்கம் கொண்ட கடிதத்தின் படி மேற்கூறிய உபகரணங்களின் தரப் பரிசோதனை மேற்கொள்ளும் படி களஞ்சியத்தினால் 2023 ஒக்தோபர் 18 திகதி மருத்துவ பெறுகை அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன், 2025 மே 02 திகதி அளவிலும் குறிப்பிட்ட தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இருப்பு விண்ணப்பிக்கும் தேவைப்பாடு தொடர்பாக மற்றும் இறுதிப் பயன்படுத்துவோர் தொடர்பாக (END USER) எதுவித தெளிவான பதிவுகளும் காணப்படவில்லை. போதியளவு மனிதவளம் காணப்படாமையினால் வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு முழுமையாக செயற்படு மட்டத்தில் காணப்படாததுடன், மருத்துவ விடயங்களின் தேவைப்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை. களஞ்சியத்திற்கு கிடைத்த இருப்பு தரப் பரிசோதனை தோல்வியடைந்திருந்தது. மீண்டும் அந்தப் பண்டங்களுக்கு விண்ணப்பித்து தரப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கின்றேன்.

மற்றும் பயன்படுத்தாமை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ)	பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்திற்காக ரூபா 84,848,400 தொகை பெறுமதியுடைய 1,275 கதிரைகள் கொள்வனவு செய்தவற்காக 2023 மார்ச் 10 திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி அந்த கதிரைகள் 2023 நவம்பர் 14 திகதி பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்திருந்தது. இதுவரை கேட்போர் கூடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்திருக்காமையால் அந்த நிர்மாணிக்கப்பட்டு வரும் கேட்போர் கூட கட்டிடத்தினுள் விளைவற்று காணப்பட்டதுடன், ஒரு வருட உத்தரவாக காலமும் முடிவடைந்திருந்தது.	2023 ஜுன் 07 திகதி நிறுவனத்திற்கு கிடைத்திருந்த போதிலும், பல்கலைக்கழக கேட்போர் கூட நிர்மாண வேலை அலுவல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் இந்த கேட்போர் கூடத்தில் பொறுத்தப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு ஒப்பந்த வேலையின் வழங்குனரினால் குறிப்பிட்ட பண்டங்களை வழங்குவதற்கு மற்றும் பொறுத்துவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	விரைவாக ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.